2003 ஏப்ரல் 7]

(ஆ) புதிய தலைமைச் செயலக வளாகம் மற்றும் இராணி மேரி கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே அவையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளலாம். என்ன என்று கேட்டு என்னுடைய அறைக்கு வாருங்கள். அதுபற்றிப் பேசி எடுத்துக்கொள்ளலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இராணி மேரி கல்லூரி இருக்கின்ற இடத்தில் தமிழக அரசினுடைய தலைமைச் செயலகம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீதிமன்றத்திலே இருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தை எப்போது எடுக்க வேண்டுமோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம். பிரச்சினை நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறது.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே, அந்தப் பிள்ளைகளை, வேலை செய்கிறவர்களை வெளியேற்றக் கூடாது, இடிக்கக் கூடாது என்றுதான் தடை உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அங்கே கட்டடம் கட்டுவதை, தலைமைச் செயலகத்தை மாற்றுவதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, ஒத்திவைப்புத் தீர்மானத்தை எப்போது எடுத்துக்கொள்ளலாமோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம், அதற்குப் பிறகு.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Please. தலைமைச் செயலகத்தை இங்கிருந்து மாற்றுவதைக் குறித்தே நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம், மக்களிடையே ஏற்பட்டிருக்கிற பிரச்சினையின் அடிப்படையில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புப் பிரச்சினையைத்தான் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன்: இதற்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. ஆகையினால், உடனடியாக ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள், எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்று பேசுவோம்.

திரு. துரைமுருகன்: அறையிலே வந்துதான் சார் கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே வந்து சொல்லுங்கள். அறையிலேதான் அதற்குப் பதில் கிடைக்கும்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைவிட இந்தப் பேரவை பெரிய அறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறையிலே கொடுத்ததற்கு அறையிலேதான் விளக்கம் அளிக்க வேண்டும். (குறுக்கீடு) துரைமுருகன், அதை ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள முடியும், உட்காருங்கள் (குறுக்கீடு) அதை ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள முடியும், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள வேண்டும். எப்போது எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள். எஸ்.ஆர்.பி. வேறு என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) அதுதான் சரி. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த . . . (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. மணி, என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இராணி மேரி கல்லூரி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் சொல்லிவிட்டேன். திரு. ஜி.கே. மணி.

(இ) உலக சுகாதார தினம்

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலக சுகாதார தினம். அனைவருடைய ஆரோக்கிய வாழ்விலே அரசு அக்கறை கொள்ள வேண்டும். ஆகவே, ஆரோக்கிய வாழ்வே அற்புதமான வாழ்வு என்று சொல்லக்கூடிய வகையிலே, இன்று உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, தமிழக அரசு ஏதாவது முக்கிய அறிவிப்பை வெளியிட இருக்கிறதா? *(மணியடிக்கப்பெற்றது)* ஒன்றே ஒன்று.